கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் . 18/2017

வாதி தரப்பு சாட்சி 2 பெத்து ரெட்டியார் திருமதி.ஏ .பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.06.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. பெருமாள் வகையறா இவ்வழக்கில் என்ன எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால்  தெரியாது.  வேல்முருகன் வகையறா எதற்காக வழக்கு தாக்கல் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் எனது சொத்தை எனது தம்பிக்கு சொத்து விடுதலை செய்து கொடுத்துள்ளேன்.  எனது தம்பி வேல்முருகனுக்கு எழுதி கொடுத்துள்ளார்.  வீரபத்திர ரெட்டியார், வீரம ரெட்டியால், அக்குல் ரெட்டியார், பெருமாள் ரெட்டியார் ஆகியோர் தங்கள் சொத்துக்களை 40 வருடங்களுக்கு முன் வாய்க்காரர் மூலம் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். பின்னிட்டு அவரவருக்கு தனியாக பட்டா வந்துவிட்டது என்றால் சரிதான். மேற்படி நபர்கள் வாய்க்காரர் மூலம் பாகம் பிரித்தது கிணறு பொதுவாக இருக்கிறது என்றால் சரிதான்.  பின்னிட்டு வாய்க்காரர் மூலம் அந்த கிணறை எங்களுக்கு கொடுத்துவிட்டார்கள்.

2. பெருமாள் வகையறாவிற்கு மேற்படி கிணற்றில்  ¼ பங்கு தலா பாத்தியம் என்றால் சரிதான்.  நான் எனது தம்பிக்கு கொடுத்த விடுதலை ஆவணத்தில் கிணற்றின் பாகத்தை அதிகமாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. பட்டாவில் உள்ளவாறு கொடுத்துள்ளேன்.  பெருமாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தான சர்வே 800/5 A யை  எந்த அடிப்படையில் நான் விடுதலை பத்திரம் எழுதினேன் என்றால் பெருமாள் மேற்படி சொத்து பாத்தியம் இல்லை.  வாய்க்காரர் மூலம் எனக்கு பாத்தியப்பட்டது.  சர்வே எண்.800/5 A யார் பெயர் பட்டா உள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. எங்கள் அனுபவத்தில் உள்ளது.  பெருமாள் ரெட்டியார் பெயரில் உள்ள சொத்தை நாங்கள் கிரையம் செய்ததால் மாவட்ட குற்ற பிரிவில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.  மாவட்ட குற்ற பிரிவில் குற்ற எண்.2/2017 வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்.கு தெரியாது.

3. தாவா சொத்தின் C ஷெட்யூல் சர்வே எண்.820/2D சொத்து 4ம் பி ரதிவாதி ராமசாமிக்கு பாத்தியம் என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண்.820/2D ராமசாமிக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. எனது தம்பிக்கு கிரையம் கொடுத்த வீரம ரெட்டியாருக்கு பாத்தியம். ராமசாமி கொடுத்த புகாரின் அடிப்படையில் மாவட்ட குற்ற பிரிவில் வழக்கு குற்ற எண்.01/2017 யை தாக்கல்செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி குற்ற எண் 01/2017 வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி தான் பொய்யான காரணங்கள் கூறி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வீரம ரெட்டியார், எனது தம்பி மனைவி கிருஷ்ணகுமாரி ஆகியோர் குற்ற பிரிவில் உரிமையியல் வழக்கு நிலுவையில் இருப்பதால் மேற்படி புகாரின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

4. எனது தம்பி மற்றும் அவரது மனைவி கிருஷ்ணகுமாரிக்கு எதிராக இவ்வழக்கு தவிர வேறு உரிமையியல் வழக்கு நிலுவையில் இருக்கிறதா என்றால் இல்லை. பொதுவான கிணறிற்கு நடந்து செல்ல வாய்க்கால் வரப்பு உள்ளது என்றால் கிணறு தூர்ந்து விட்டதால் அதற்கு நடந்து செல்ல பாதை இல்லை . தாவா வழக்கில் கிணறு மொட்டை கிணறு, தண்ணீர் இல்லை என சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. பொதுவான கூட்டு சொத்தில் உரிமையாளர்களுக்கு எதிராக தடை உத்தரவு கேட்க முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொதுவான சொத்தை எங்கள் சொத்துடன் சேர்த்து கிரையம் செய்ய முடியாது என்றால் சரியல்ல. வாதி எனது உடன் பிறந்த சகோதரன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
**Kulithalai.**